# குழந்தைகளுக்கு வேதாகமம்
## வழங்குபவர்

# எரேமியா
# (கண்ணீர் நாயகன்)



எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Jonathan Hay
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Mary-Anne S.

**கதைகள்** 60 **ல்** 28

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil

யூதேயா தேசத்தில், ஒரு இறைப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்தவன் எரேமியா. அவனுடைய தந்தை இலக்கியா, ஒரு ஆசாரியன். ஆனதோத் என்ற ஊரிலே அவர்களுடைய குடும்பம் வாழ்ந்து வந்தது. அது எருசலேமிலிருந்து வெகு தூரத்திலே இல்லை. ஒருவேளை எரேமியாவின் பெற்றோர் அவனும் ஒரு ஆசாரியனாக வருவான் என்று நினைத்திருக்கலாம். ஆனால் தேவனிடத்தில் வேறே திட்டம் இருந்தது.



1



எரேமியா பிறந்த நாட்களில், தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய வார்த்தையின் படி ஜீவிக்கவில்லை.

2


ஏறக்குறைய எல்லோரும்,
அரசன் முதல் சாதாரண
மனிதன் வரை,
தவறான தேவர்களை
வழிபட்டதுமல்லாமல்,
தேவனுடைய பரிசுத்த
தேவாலயத்திலும்
அவ்வாறு
செய்தார்கள்.
3


எரேமியா சிறு பையனாக
இருக்கும் போது, தேவன் அவனுடன் பேசினார்.
4


"நீ பிறக்கும்
முன்பாகவே
உன்னை நான்
அறிந்திருக்கிறேன்,
அப்போதே நீ எனக்காக
பேச வேண்டுமென நான் திட்டமிட்டிருக்கிறேன்,"
என்று தேவன் எரேமியாவிடம் சொன்னார்.
5


தேவனுடைய அழைப்பு எரேமியாவுக்கு ஒரு திகிலை
கொடுத்தது போல் இருந்தது. "ஆ, ஆண்டவராகிய தேவனே!"
என்று அவன் அழுதான். "என்னால் பேச முடியாது, நான் ஒரு
குழந்தை," அவன் குழந்தையை விட சற்றும் பெரியவனாக
இருந்தான் -
அப்போது
அவனுக்கு
வயது இருபது.
6


தன்னைச் சுற்றிலும் துன்மார்க்கத்தை பார்க்கும் போது அதற்கு
எதிராக தேவனுக்காக பேச முடியுமா என்று எரேமியாவால்
அப்போது யோசித்து பார்க்க முடியவில்லை.
7


"நீ பயப்படாதே"
என்று தேவன்
எரேமியாவை
உறுதி
செய்தார்.
"நான்
அனுப்புகிற
இடத்திற்கெல்லாம்
நீ போ. நான் உனக்கு
சொல்வதையெல்லாம்
நீ சொல். நான் உன்னோடு
இருந்து நான் உன்னை
விடுவிப்பேன்."
8


பின்பு தேவன் ஒரு விசேஷமான காரியத்தை செய்தார். தேவன் எரேமியாவின் நாவை தொட்டார்.
9


எரேமியாவிற்கு தேவன் பலத்தையும், தைரியத்தையும் மற்றும் ஞானத்தையும் கொடுத்தார். அவன் தைரியமாக பேச ஆரம்பித்தான், தேவன் ஜனங்களை நேசிக்கிறார் மற்றும் உதவி செய்ய ஆயத்தமாய் இருக்கிறார் என்று ஞாபகப்படுத்தினான்.
10


ஆனால் யாரும் அவனுடைய பேச்சை கேட்கவில்லை. ராஜாகூட கேட்கவில்லை.
11


ஆசாரியர்கள் கூட கோபப்பட்டு தேவனைப் பற்றி பேசுவதை நிறுத்து என்று அவனிடம் சொன்னார்கள். அங்கு அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். அவர்கள் எரேமியா உண்மையைக் கூறவில்லை என்றார்கள்.
12


சுமார் நூறு வருடங்களுக்கு முன்னால் வடநாடான இஸ்ரவேல் தேவனை விட்டுவிட்டார்கள் என்று எரேமியா ஜனங்களுக்கு ஞாபகப்படுத்தினான். அவர்களுடைய பகைஞர்களான அசீரியர்கள், அவர்கள் மேல் வெற்றி கொண்டதுமல்லாமல் இஸ்ரவேலரை தூர தேசத்திற்கு இடமாற்றம் செய்தார்கள்.
13


இப்போது யூதேயா ஜனங்கள், தென் நாட்டவர்கள், தேவனை விட்டுவிட்டார்கள். அவர்களை எதிர்க்கும் படையானது ஏற்கெனவே அடியெடுத்து வந்து கொண்டிருக்கிறது.
14


தன்னுடைய ஜனங்களின் மேல் வெற்றியைக் கொடுத்து மற்றும் அவர்களையும் சிறையிருப்புக்கு எடுத்து செல்வாரா?
15
ஜனங்களோ தங்களுடைய விக்கிரங்களை நம்பினார்கள். அவர்களுடைய விக்கிரகங்கள் அவர்களை சத்துருக்களிடமிருந்து காப்பாற்றுமா?
16
ஜனங்கள் எரேமியாவின் மேல் மிக அதிகமாக கோபப்பட்டு, அவனை கொலை செய்ய திட்டம் தீட்டினார்கள். ஆனால் தேவனோ தன்னுடைய ஊழியக்காரனை பாதுகாத்தார்.
17
கடைசியாக, தேவன் சொல்லிய ஒரு காரியம் எரேமியாவை அதிர்ச்சியடைய செய்தது. தேவன் சொன்னார், "இந்த ஜனங்களுக்காக நீ விண்ணப்பம் பண்ணாதே. தங்களுக்கு உதவி வேண்டுமென அவர்கள் என்னை நோக்கி முறையிடும் போது நான் கேட்க மாட்டேன்."
18
பாபிலோனுடன் உள்ள யுத்தத்திலே தோற்றுப் போவீர்கள் என்று எரேமியா ராஜாவை எச்சரித்தான். ராஜா கோபப்பட்டு எரேமியாவை சிறைச்சாலையிலே போடுவித்தான். சிறையில் கூட எரேமியா தொடர்ந்து பிரசங்கம் பண்ணிக் கொண்டு மற்றும் தேவனில் நம்பிக்கையுடன் இருந்தான்.
19
எரேமியா சிறைச்சாலையிலிருந்து வெளியே வந்த உடன் மறுபடியுமாக அவர்கள் தேவனிடத்திற்கு திரும்பி அவரில் நம்பிக்கை வைக்க வேண்டுமென ராஜாவுக்கும், ஜனத்திற்கும் பிரசங்கம் பண்ணினான்.
இந்த முறை, ராஜா எரேமியாவை சேறு நிறைந்த ஆழமான குழியிலே போடுவித்தான்.
20

ஆனால் தேவனோ ராஜாவினுடைய இருதயத்தில் கிரியை செய்தார். இரகசியமாக அவன் எரேமியாவை காப்பாற்றி ராஜா என்ன செய்யவேண்டுமென தேவன் விரும்புகிறார் என்று அவனிடம் கேட்டான்.



21

"சிறையிருப்புக்குச் செல்லுங்கள், நீங்கள் ஜீவிப்பீர்கள் என்று தேவன் சொல்லுகிறார்," என்பது எரேமியாவின் பதிலாயிருந்தது.



22

பாபிலோனின் படை எருசலேமின் மேலும் மற்றும் யூதா அனைத்தின் மேலும் வெற்றி பெற்றது. அவர்கள் கோட்டைகளையும் மற்றும் கட்டிடங்களையும் தரை மட்டமாக்கினார்கள், மற்றும் எல்லாவற்றையும் சுட்டெரித்து போட்டார்கள்.



23

தேவனுடைய ஜனங்கள் எழுபது வருடம் சிறையிருப்புக்குச் செல்வார்கள் என்றும் பின்பு அவர்களை வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு திரும்ப அழைத்து வருவேன் என்றும் தேவன் சொன்னார்.



24

எரேமியா (கண்ணீர் நாயகன்)

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

எரேமியா

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.